செ. கு. எண்:75

<u>மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்</u>

<u>அறிக்கை – 14.3.2013</u>

மதுரை மாநகர், ஜெய்ஹிந்துபுரம் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. P.ராமச்சந்திரன் அவர்கள் 4.3.2013 அன்று மாரடைப்பு ஏற்பட்டு, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

மதுரை மாநகர், சிறுவர் நல காவல் பிரிவில் (Juvenile Aid Police Unit) உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. T.ராஜசேகரன் அவர்கள் 5.3.2013 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

சேலம் மாநகர், தெற்கு போக்குவரத்து பிரிவில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. C. வெங்கடாச்சலம் அவர்கள் 6.3.2013 அன்று கழிவுநீர் கால்வாயில் தவறி விழுந்ததில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கோயம்புத்தூர் மாவட்டம், வடவள்ளி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. R.மோகன்தாஸ் அவர்கள் 8.3.2013 அன்று மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியையும்;

திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி நகர காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. D.ஜெயராமன் அவர்கள் 8.3.2013 அன்று உடல் நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

சேலம் மாவட்டம், தீவட்டிப்பட்டி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. A.கோவிந்தராஜ் அவர்கள் 8.3.2013 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

சென்னை பெருநகர காவல், கீழ்ப்பாக்கம் போக்குவரத்து புலனாய்வுப் பிரிவில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. U.ராதாகிருஷ்ணன் அவர்கள் 9.3.2013 அன்று மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிக்க துயரம் அடைந்தேன்.

காவல் துறை உதவி ஆய்வாளர் ராஜசேகரன், சிறப்பு உதவி ஆய்வாளர்கள் மோகன்தாஸ், ஜெயராமன், கோவிந்தராஜ், ராதாகிருஷ்ணன், தலைமைக் காவலர்கள் திரு. ராமச்சந்திரன் மற்றும் திரு. வெங்கடாச்சலம் ஆகியோரின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவர்களது குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

உடல்நலக் குறைவால் காலமான உதவி ஆய்வாளர் ராஜசேகரன், சிறப்பு உதவி ஆய்வாளர்கள் ஜெயராமன், மற்றும் கோவிந்தராஜ், மாரடைப்பால் காலமான சிறப்பு உதவி ஆய்வாளர்கள் மோகன்தாஸ், ராதாகிருஷ்ணன் மற்றும் தலைமைக் காவலர் திரு. ராமச்சந்திரன், கழிவுநீர் கால்வாயில் தவறி விழுந்து உயிரிழந்த தலைமைக் காவலர் திரு.வெங்கடாச்சலம் ஆகியோரின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா மூன்று லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9**